# இலங்கையில் நீடித்த சமாதானத்திற்குச் சாத்தியமில்லை! ஐ.நா பிரதி மனித உரிமை ஆணையாளர் தெரிவிப்பு



இலங்கையில் தண்டனையின் பிடியிலிருந்து விலக்களிக்கப்படும் கலாசாரம் நிலவும் வரை உண்மையான நல்லிணக்கமோ நீடித்த சமாதானமோ சாத்தியமில்லை!, என ஐ.நா.வின் பிரதி மனித உரிமை ஆணையாளர் நடா அல் நசீப் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் 53 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான வாய்மூல அறிக்கையிடலின்போதே அவர் இந்தக் கருத்தை முன்வைத்துள்ளார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி தொடர்ந்தும் இலங்கை மக்களின் உரிமை மற்றும் நலன்களின் மீது கடும் தாக்கத்தை ஏற்படுத்தி வருவதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

பொருளாதாரச் சீர்திருத்தத்தின் சுமைகள் சமத்துவம் இன்மைகளை மேலும் அதிகரிக்காமலிருப்பதை உறுதி செய்வது மிகவும் அவசியம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு, பொருளாதார மறுசீரமைப்பு நடவடிக்கைகளால் மிகவும் நலிந்த மக்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளில் இருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான பாதுகாப்பு வலையமைப்புகள் அவசியம் என்றும் அவர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

துரதிஷ்டவசமாக மிகவும் ஆபத்தான சட்டங்கள் எதிரணியினரைக் கட்டுப்படுத்துவதற்கும் சிவில் சமூகத்தின் செயற்பாடுகளை முடக்குவதற்கும் பயன் படுத்தப்படுவதை கடந்த மாதங்களில் பார்க்க முடிந்துள்ளதாகவும் ஐ.நா.வின் பிரதி மனித உரிமை ஆணையாளர் நடா அல் நசீப் சுட்டிக்காட்டியுள்ளார்.


மாலைக்கதிர்

Maalaikkathir



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்



சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 08 வியாழக்கிழமை 22.06.2023 கதிர் 09




## சீனாவுக்குப் பயணமாகிறார் அமைச்சர் அலி சப்ரி

சீன அரசவை உறுப்பினரும் வெளியுறவு அமைச்சருமான குயின் கேங்கின் அழைப்பிற்கமைய இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி சீனாவிற்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ள உள்ளார்.

எதிர்வரும் 24 முதல் 30 ஆம் திகதி வரையில் அவரது சீனப் பயணம் அமையவுள்ளதாக இலங்கைக்கான சீனத் தூதரகம் தமது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.

## தமிழர்கள் மாத்திரம் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டுவதற்கே தமிழர்கள் எதிர்ப்பு

### சிங்கள பௌத்த இனவாதிகளிடம் அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



"தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதையும், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் வைப்பதையும், தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர்" - என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.


(அவர் வெளியிட்டுள்ள அறிக்கை 2 ஆம் பக்கத்தில்)


## எல்லை தாண்டிய மீன்பிடி 22 இந்தியர்கள் கைது!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இந்தியாவின் தமிழகத்தைச் சேர்ந்த 22 மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவை அண்டிய கடற்பகுதியருகே நேற்று இரவு இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது அப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினர் 4 படகுகளைக் கைப்பற்றியதோடு, அதிலிருந்த 22 இந்திய மீனவர்களையும் கைதுசெய்தனர்.

கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை காங்கேசன்துறைக்கு அழைத்து வந்து, விசாரணைகளுக்குப் பின்னர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தினரிடம் அவர்களை ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கைதான இந்திய மீனவர்களை இன்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் கடற்படைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.



## ஆயுதம் தாங்கிய படையினரை நிலை நிறுத்துக! பொது அமைதியைப் பேண ஜனாதிபதி உத்தரவு

நாட்டில் பொது அமைதியைப் பேணுவதற்காக நாடளாவிய ரீதியில் ஆயுதம் தாங்கிய படையினர் அனைவரையும் நிலைநிறுத்துமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். இந்த விடயத்தை சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன இன்று நாடாளுமன்ற அமர்வில் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் ஊழல் எதிர்ப்புச் சட்ட மூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதம் இன்று காலை 9.30 அளவில் ஆரம்பமாகியிருந்தது. இந்த நிலையிலேயே குறித்த உத்தரவு தொடர்பான ஜனாதிபதியின் அறிவிப்பை சபாநாயகர் நாடாளுமன்றில் சமர்ப்பித்தார்.

நாற்பதாவது அதிகாரம் கொண்ட பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் பன்னிரண்டாவது பிரிவின்படி வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய, ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



## வல்லை - தொண்டைமானாறு வீதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், வல்லைப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் சடலம் ஒன்று இன்று காலை மீட்கப்பட்டுள்ளது.

வல்லை - தொண்டைமானாறு வீதியில் உள்ள வெளியில் சடலம் ஒன்று காணப்படுவதாக வல்வெட்டித்துறைப் பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலின் பிரகாரம், சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் அடையாளம் காண முடியாத அளவுக்கு உருக்குலைந்து காணப்படுகின்ற நிலையில், அது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# தமிழர்கள் மாத்திரம் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டுவதற்கே தமிழர்கள் எதிர்ப்பு

## சிங்கள பௌத்த இனவாதிகளிடம் அருட்தந்தை சத்திவேல் தெரிவிப்பு



“தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதையும், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் வைப்பதையும், தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர்”, என்று சமூக நீதிக்கான செயற்பாட்டாளரும் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளருமான அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில், தெற்கில் தமிழர்களுக்கு எதிரான இனவாதக் கருத்துக்களைக் கக்குவதற்கும் அதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கும் அமைச்சும், அமைச்சர்களும் நியமிக்கப்பட்டிருக்கின்றார்களோ?, என்று சிந்திக்கத் தோன்றுகின்றது.

மீண்டும் மீண்டும் தமிழர்களுக்கு எதிராக, தமிழர்களின் அரசியலுக்கு எதிராக, மரபுரிமை சார்ந்த தமிழர்களின் கொள்கைக்கு எதிராகக் கருத்துக்கள் வெளிப்படும் நிலையில், தற்போது அரசுச் சார்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர், பௌத்தர்களின் எழுச்சியை அடக்க முடியாது. பிரபாகரன் போன்று செயல்பட வேண்டாம். தெற்கில் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள். வடக்குத் தமிழர்களால் பௌத்தர்களுக்கு ஆபத்து வந்துவிட்டது!, என்று கூறி தெற்கின் சிங்கள பௌத்தர்களை உசுப்பேத்தி விடும் செயற்பாட்டில் இறங்கியுள்ளார்.

இது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய விடயமாகும். தமிழர்களுக்கு எதிரான அடுத்த வன்முறையை குருந்தூர் மலையிலா? திரியாயிலா? அல்லது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூற்றுகளில் இருந்தா? ஆரம்பிப்பது என யோசிப்பது போல் தோன்றுகின்றது.

இத்தகைய வன்முறையைத் தூண்டும் கருத்துக்களை அரசுத் தரப்பினரோ, எதிரணியில் தமிழர்கள் அல்லாத எவருமோ கண்டிக்கவும் இல்லை. சமய அமைப்புகளும் இவ்வாறான கருத்துக்களுக்கு மௌனம் காப்பது இவர்களும் இதனை ஆதரிக்கின்றார்களோ? என்று கேட்கவும் வைக்கின்றது.

யுத்த காலத்தில் ஆயுதப்படைகள் தமிழர்களின் பூமியை ஆக்கிரமித்தது போன்று ஆயுதம் மௌனிக்கப்பட்ட நிலையில் சிங்கள பௌத்த கருத்தியல் கொண்ட வனஜீவராசிகள் திணைக்களம், வனவளப் பாதுகாப்புத் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் என்பன ஆக்கிரமிப்பு வேலைகளைத் தீவிரப்படுத்தியிருப்பதோடு, தமிழர் தாயகத்தில் காணப்படும் தொல்லியல் பெறுமதி வாய்ந்த இடங்களை எல்லாம் சிங்கள பௌத்தருக்குச் சொந்தமானவை எனக் கூறி, தமிழர் மரபுரிமையை மறுத்து, சிங்கள பௌத்தத்தை நிலைநாட்ட முனைவது தமிழர்களையும் கொதிநிலைக்குத் தொடர்ந்து தள்ளுகின்ற செயற்பாடாகும்.

அத்தோடு, குருந்தூர் மலை - சைவர்களுக்கும், தமிழ் பௌத்தர்களுக்கும் சொந்தமானது, என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்து, குருந்தூர் விகாரை எனக் கூறி சிங்கள பௌத்தர்களை அணி திரட்டத் திட்டமிடுவதோடு, நீதிமன்றக் கட்டளையை மீறி இராணுவத்தினரின் துணையோடு விகாரை கட்டுவதையும், தமிழர்கள் அங்கீகரிக்கும் சர்வதேச தொல்லியல் ஆராய்ச்சி நிபுணர்களையும் சேர்த்து ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ள எந்த முயற்சியையும் மேற்கொள்ளாதது மட்டுமல்ல, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துறைசார் பேராசிரியர்கள், மாணவர்களைச் சேர்ந்து தொல்லியல் ஆய்வுகளை நடத்த அனுமதிக்காது தமிழர் மரபுரிமையை இருட்டடிப்பு செய்ய நினைப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழர்கள், உண்மையான பௌத்தத்துக்கும், சிங்களவர்களுக்கும், வேறு எந்த மதத்தவர்களுக்கும் எதிரானவர்கள் அல்ல! - எனத் திரும்பத் திரும்பக் கூறினாலும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே உள்ளது.

தமிழர்களின் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்வதையும், பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் வைப்பதையும், தமிழர்கள் மட்டும் வசிக்கும் பிரதேசங்களில் விகாரைகளையும், தூபிகளையும் கட்டுவதையுமே தமிழர்கள் எதிர்க்கின்றனர்.

மேலும், புராதன கால சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்களில் தமிழ் மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கட்டிய சைவக் கோயில்கள் உள்ளன. அங்கு அகழ்வாராய்ச்சி செய்து காணப்படும் தமிழர் மரபுரிமைகளையும், ஏனைய தொல்பொருட்களையும் அழிய விடாது பாதுகாக்காதது ஏன்?

அனுராதபுரம், பொலன்னறுவை போன்ற இடங்களில் எத்தனையோ மரபுரிமை சார்ந்த இடங்கள் அழிவுறும் நிலையில் உள்ளன. அங்கு தொல்பொருள் திணைக்களம் தனது செயற்பாடுகளை மந்த கதியில் நடத்திக் கொண்டு, தமிழர் நிலங்களையும், மரபுரிமைகளையும், குருந்தூர் மலையில் நீதிமன்ற கட்டளைகளை மீறி புதிய நிர்மாணப் பணியினை மேற்கொள்வதும் ஏன்? எனும் கேள்விக்கு நேரடியாகப் பதில் கொடுக்க மறுக்கும் சக்திகள், இனவாதத்தையும் மதவாதத்தையும் தூண்டித் தம்மை மறைத்துக் கொள்ளப் பார்க்கின்றனர்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்து, வெளிநாட்டுக் கையிருப்புகளும் தீர்ந்துள்ள நிலையில், கடந்த காலத்தில் வாங்கிய கடன்களோடு, தொடர்ந்து கடன் பெறும் சூழ்நிலையில், வருமானமின்மை, பொருட்களின் விலையேற்றம் காரணமாக மக்கள் தெற்கின் கட்சிகளின் மீது நம்பிக்கை இழந்து விட்டனர். தேர்தல் நடத்தினால் எந்தவொருவருக்கும் தனித்து ஆட்சி நடத்துவதற்குப் பெரும்பான்மை கிடைக்கப் போவதில்லை. எனவே, தேர்தலுக்கு முகம் கொடுக்க மீண்டும் இனவாத சக்திகள் தமிழர்களைப் பலி எடுக்கத் தெற்கின் மக்களைத் தூண்டுகின்றனரா?

இவர்களோடு சேர்ந்து தமிழர் தாயகத்தின் ஒரு சில சுயநல விரும்பிகளும் தமிழர்களின் தேசியத்தைக் காட்டிக் கொடுக்கவும் அதற்கு எதிராகவும் செயல்படவும் துணிந்து விட்டதுபோல் தோன்றுகின்றது. 2009 இனப்படுகொலைக்கும் இத்தகையவர்களே காரணமாக இருந்தார்கள். இவர்களின் கை தற்போது ஓங்கி உள்ளதுபோல் தெரிகின்றது.

இதனைத் தோற்கடிக்க வேண்டுமானால், தமிழர்களின் தேசியத்தைக் காக்கும் சக்திகள் வலிமை பெற வேண்டும். தமிழர்களின் அரசியல் உரிமைகளையும் மரபுரிமைகளையும் பாதுகாக்க சமூக சக்தியாக ஒன்று திரள்வதோடு, பிராந்திய அரசியலுக்கு உட்படாது தனித்துவத்தோடு செயற்படுவதற்கான செயல்பாடுகளைத் தீவிரப்படுத்தினால் மட்டுமே நாம் சுதந்திரமாக வாழ முடியும்! - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கோப்பாய் கலாசாலையில் யோகா தினம்



கோப்பாய் ஆசிரியர் கலாசாலை முன்னெடுத்த சர்வதேச யோகா தின நிகழ்வும் வாராந்த ஒன்று கூடலும் இன்று வியாழக்கிழமை காலை கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் ஆன்மீகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமி கலந்துகொண்டு, ஆன்மீக நோக்கில் கல்வி என்ற பொருளில் உரையாற்றியதோடு யாழ். இந்தியத் துணை தூதரகத்தால் நடத்தப்பட்ட யோகாசனப் பயிற்சியில் கலந்து கொண்டோருக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

# தெற்கில் தொடரும் படுகொலைகள் தொடர்பாக பொலிஸ் அதிகாரிகளுக்கு கடுமையான உத்தரவு

தென் மற்றும் மேல் மாகாணங்களில் நடக்கும் கொலைகள் தொடர்பில் உடனடியான நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது அவர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

குற்றவாளிகள் சம்பந்தமாகச் சட்டத்தைக் கடுமையாக நடைமுறைப்படுத்துமாறும் இதற்கான நடவடிக்கைகளின்போது, தேவையற்ற அழுத்தங்களைக் கொடுக்கவும், தலையீடுகளைச் செய்யவும் எவருக்கும் இடமளிக்க வேண்டாம்!, எனவும் அமைச்சர் பொலிஸ்மா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளார்.

தென் மற்றும் மேல் மாகாணங்களில் கடமையாற்றும் சில சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளதும், பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளினதும் திறமையின்மையே இந்த மாகாணங்களில் கொலைகள் மற்றும் குற்றச் செயல்கள் அதிகரிக்கக் காரணம் எனச் சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர், அப்படியான அதிகாரிகளை உடனடியாக மாற்றிவிட்டுத் தகுதியான அதிகாரிகளை நியமிக்குமாறும் உத்தரவிட்டுள்ளார்.

# வட்டுக்கோட்டை தலங்கை மங்கைக் குளம் புனரமைத்து விவசாயிகளிடம் கையளிப்பு



வட்டுக்கோட்டை - சித்தன் கேணி - துறட்டிப்பனை அம்பாள் ஆலயத்துக்கு அருகே, புனரமைக்கப்பட்ட தலங்கை மங்கை குளத்தை மக்கள் பாவனைக்கு கையளிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 10.30 அளவில் இடம்பெற்றது

யாழ்ப்பாணம் கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் திருமதி தெய்வநாயகி பிரணவனால் சம்பிரதாய முறைப்படி இந்தக் குளம் திறந்து வைக்கப்பட்டது.

சங்கானை தெற்கு கமக்கார அமைப்பின் ஆதரவோடு, உலக சித்தன்கேணி ஒன்றிய மக்களின் நிதி அனுசரணையுடன் ப்ரத்யங்கிரா அறக்கட்டளையால் இந்தக் குளம் புனரமைக்கப்பட்டிருந்தது.

இன்றைய நிகழ்வில், மதகுருக்கள், வடமாகாண ஆளுநரின் செயலாளர், சுழிபுரம் கமநல சேவைகள் நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள், கமக்கார அமைப்பின் உறுப்பினர்கள், சித்தன்கேணி உலக ஒன்றியத்தின் பிரதிநிதி, ப்ரத்யங்கிரா அறக்கட்டளையினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட -
maalaikkathir@gmail.com

# பிரேத பரிசோதனைத் தகவலை வெளியிடுவதற்கும் தேசியப் பாதுகாப்பிற்கும் என்ன தொடர்பு உள்ளது?

## கேள்வி எழுப்புகிறார் சிவாஜிலிங்கம்



இறுதி யுத்தத்தின் போது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு என்ன நடந்தது? என்ற விடயத்தை அரசாங்கம் நாட்டின் தேசியப் பாதுகாப்பு என்ற போர்வையில் மூடி மறைத்து முழுப் பொய்களைச் சொல்லி வருகின்றது என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

பிரபாகரனின் பிரேத பரிசோதனை அறிக்கையை வெளியிடுவதற்கும், நாட்டின் தேசியப் பாதுகாப்பிற்கும் என்ன சம்மந்தம் உள்ளது? என்றும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், ஊடகவியலாளர் ஒருவரினால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் குறித்துக் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க நாட்டின் பாதுகாப்பு அமைச்சும், இராணுவ தலைமையகமும் மறுப்புத் தெரிவித்தன.

இந்த நிலையில் பிரபாகரனது மரபணுப் பரிசோதனைக்காக அவரின் குடும்ப உறுப்பினர்களிடம் இருந்து மாதிரிகள் பெறப்பட்டதா? என, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபாகரனின் நெருங்கிய உறவினருமான எம்.கே.சிவாஜிலிங்கத்தினடம் தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் மேதகு வே.பிரபாகரன் உயிரிழந்ததாகக் கூறப்பட்ட பின்னர், உயிரிழந்தது அவர்தான் என்பதை உறுதிப்படுத்துவதற்காக அவரின் உடலை தாங்கள் மரபணுப் பரிசோதனை செய்து உறுதிப்படுத்தினோம், என்று யுத்தம் முடிந்த ஓரிரு நாட்களில் அரசாங்கம் அறிவித்திருந்தது.

2009 ஆம் ஆண்டு மே மாதம் இலங்கையில் மரபணுப் பரிசோதனை செய்து கொள்வதற்கான வசதிகள் இருந்திருக்கவில்லை. இந்தியாவின் ஹைதராபாத்திலும், சிங்கப்பூர் போன்ற இடங்களிலும்தான் அந்த வசதி இருந்தாக நாங்கள் அறிந்து கொண்டோம். அதனைச் செய்து பதில் பெற சில வாரங்களாவது ஆகும்.

ஆகவே, யுத்தம் முடிந்த ஓரிரு நாட்களில் மரபணுப் பரிசோதனை செய்ததாகப் பொய்யான தகவலை அரசாங்கம் வெளியிட்டிருந்தது.

ஒருவேளை அவரின் உடல் என்று சொல்லப்பட்டதில் இருந்த ஒரு பகுதியை எடுத்துவைத்துப் பரிசோதிப்பதற்காக, பின்னர் பிரபாகரனின் தந்தை, தாயார் அல்லது டென்மார்க்கில் உள்ள மூத்த சகோதரர், இந்தியவின் தமிழ் நாட்டில் வாழும் சகோதரி, கனடாவில் வாழும் மற்றுமொரு சகோதரி போன்றவர்களிடம் எந்தக் காலகட்டத்திலும் மரவபணு மாதிரிகள் பெற்றுக் கொள்ளப்படவில்லை.

ஆனால், தேசியத்தலைவரது தந்தையாரும், தாயாரும், யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட தினத்தில் இருந்து 3 நாட்களின் பின்னர்தான் அரசாங்கத்தின் காவலில் இருந்து வெளியே எடுக்கப்பட்டார்கள். அவர்கள் இராணுவத் தடுப்புமுகாமான பலாகொடையில் இருந்தபோது, அவர்களுக்கே தெரியாமல் அரசாங்கம் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டதா? அல்லது, தந்தை இறந்த பின்னர் அவரின் உடலில் இருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டனவா? அதேபோல வைத்தியசாலையில் இருந்தபோது அவரின் தாயாரின் மாதிரிகளும் அவர்களுக்குத் தெரியாமல் எடுத்துக்கொண்டிருக்க முடியும்.

பிரபாகரனின் தாயார் 2011 ஆம் ஆண்டு மாசி மாதம் 20 ஆம் திகதி காலமாகியிருந்தார். அவருடைய தகனக்கரியைகள் 22 ஆம் திகதி நடைபெற்றன. அன்று நள்ளிரவு வேளை சிதையிலே இருந்த அவரின் அஸ்திகளின் மேலே 4 நாய்களை இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்து போட்டு, கோர தாண்டவத்தை ஆடிச்சென்றிருந்தனர். அப்போது வேண்டுமென்றால் தாயாரின் அஸ்தியைக்கூட எடுத்துச் சென்றிருக்க முடியும்.

இவ்வாறான நிலைமையிலே, பிரபாகரனின் மாதிரிகளை நாங்கள் எடுத்து வைத்திருந்தோம், அதை அவருடைய தந்தை அல்லது தாயாரின் மாதிரிகளுடன் ஒப்பிட்டு உறுதிப்படுத்தினோம், என்று சொல்வதற்கும், தேசியப் பாதுகாப்பிற்குக் குந்தகம் என்று சொல்வதற்கும் என்ன தொடர்பு உள்ளது?

அரசாங்கம் பச்சைப் பொய்யைச் சொல்லுகின்றது. ஒரு பிரேத பரிசோதனை நடத்தப்படவேண்டும் என்றால், சட்டவைத்திய அதிகாரியின் முன்னால்தான் நடக்க வேண்டும். ஆனால், அவ்வாறான ஒன்று நடந்ததாக அரசாங்கம் இதுவரை கூறவில்லை.

அதைவிட, ஒரு நீதிபதியின் முன்னால்தான் மரண விசாரணை நடைபெறவேண்டும். நீதிபதிதான் பிரேத பரிசோதனை நடத்துவதற்கான உத்தரவை வழங்க வேண்டும். அவ்வாறான எதுவும் இங்கு நடக்கவில்லை.

கருணாவையும், தயா மாஸ்டரையும் கொண்டு சென்று காட்டியவர்களுக்கு, ஒரு நீதிபதியை அல்லது ஒரு சட்ட வைத்திய அதிகாரியை உலங்கு வானூர்தி மூலம் அழைத்துச் செல்வதற்கு என்ன தடை இருந்தது?

அரசாங்கம் தொடர்ந்தும் பொய்யையும் கூறி, பித்தலாட்டமும் ஆடி, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தையே பொய்மையாக்குகின்றது.

தமிழர் தாயகத்தில் ஆக்கிரமிப்புச் செய்வது உட்பட தான் நினைத்தவற்றைச் செய்வதற்கு, தேசியப் பாதுகாப்பு என்ற வார்த்தையை அரசாங்கம் பயன்படுத்துவது போல, தேசியத் தலைவர் பிரபாகரனின் விடயத்தை மூடி மறைப்பதற்காகத் திட்டமிட்டு, அதே தேசியப் பாதுகாப்பு என்பதை நாட்டின் பாதுகாப்புத் துறையும், படைத்துறையும் பயன்படுத்தியுள்ளன என்பதே உண்மை!, என்று சிவாஜிலிங்கம் உறுதிபடக் கூறியுள்ளார்.

# யாழிலிருந்து ஏற்றுமதியாகும் வாழைப்பழங்களால் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்கள் வருமானம்

யாழ்.மாவட்டத்தில் பயிரிடப்படும் புளிப்பு வாழைப்பழங்களை வாரம் ஒருமுறை துபாய்க்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் யாழ்ப்பாண விவசாயிகள் ஒரு இலட்சம் அமெரிக்க டொலர்களைச் சம்பாதித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வடமாகாண அதிகாரிகளுடனான விவசாயத் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோதே இந்த விடயம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மூன்று வருடங்களில் இந்த வருமானத்தை ஐந்து இலட்சம் டொலர்களாக உயர்த்த இலக்கு நிர்ணயித்துள்ளதாக வடமாகாண பிரதம செயலாளர் எஸ்.எம். சமன் பந்துலசேன குறிப்பிட்டுள்ளார்.



மேலும், வடமாகாணத்தில் 8000 ஏக்கர் காணிகளை இனங்கண்டு, இளம் தொழில் முயற்சியாளர்களுக்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விவசாயத் திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கு மாகாண ஆளுநரிடமிருந்து பணிப்புரைகள் கிடைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மாம்பழம், பப்பாளி, பாசிப்பழம் (பஷன் ப்ருட்) போன்றவற்றை வெளிநாட்டுச் சந்தைகளுக்கு அனுப்பத் திட்டமிட்டுள்ளதாகவும், மாகாணத்தின் மிளகாய்த் தேவையைப் பூர்த்தி செய்ய 1000 ஏக்கரில் மிளகாய் பயிரிடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரணக் கிணற்றுப் படியில் இருந்து தவறி விழுந்து இரண்டு வயதுக் குழந்தை பரிதாபகரமாக மரணம்!

படியில் இருந்து தவறி விழுந்து இரண்டு வயதுக் குழந்தையொன்று பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது.

தம்பகல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுல்ல பிரதேச சபை விளையாட்டு மைதானத்தில் நேற்று இடம்பெற்ற கொண் டாட்ட நிகழ்வின் போது, மரணக் கிணற்றின் படியில் இருந்து தவறி விழுந்தே குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.

கஹட்டகஸ்திகிலிய பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த குழந்தை, பலத்த காயங்களுடன் மொனராகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பதுளை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளது. மரணக் கிணறு விளையாட்டின் உரிமையாளரது லொறிச் சாரதியின் குழந்தையே இவ்வாறு படிக்கட்டில் ஏறும்போது கீழே விழுந்து இறந்துள்ளது.

நிகழ்ச்சிக்கு முன்னதாக, மரணக் கிணறின் பாதுகாப்பு மற்றும் அலங்காரத்துக்காகக் குழந்தையின் தந்தை வந்திருந்தபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

# இரணுவப் பேருந்துடன் மோதி மூன்றே வயதான சிறுமி பலி!

இரணுவத்தினர் பயணித்த பேருந்துடன் மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 3 வயதுச் சிறுமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

பண்டாரகம பகுதியில் இன்று காலை இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அப்பிரதேசத்துப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

ரைகம கலகட வீதிப் பகுதியைச் சேர்ந்த இசதி தெனெத்மா சபுகே என்ற மூன்று வயதுச் சிறுமியே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

பண்டாரகம கூட்டுறவுச் சங்கத்தின் பிரதான காரியாலயத்தின் கணக்காளரான உயிரிழந்த சிறுமியின் தாயார், சிறுமியுடன் மோட்டார் சைக்கிளில் அலுவலகத்திற்கு சென்று கொண்டிருந்தபோது, பண்டாரகம கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு முன்பாக இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் கூறினர்.

களுத்துறையில் இருந்து இராணுவத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ், பண்டாரகமவில் இருந்து கெஸ்பாவ நோக்கிச் சென்று கொண்டிருந்தபோதே இவ்விபத்து நேர்ந்துள்ளதாக பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சிறுமியையும் அவரது தாயையும் உடனடியாக பண்டாரகம மாவட்ட வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்றதாகவும், இருப்பினும் சிறுமி வைத்திய சாலைக்குச் செல்லும் முன்னரே உயிரிழந்து விட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தமிழ்நாட்டில் 500 மதுக்கடைகள் இன்று முதல் மூடப்படுகின்றன!




தமிழ்நாடு முழுவதும் 500 மதுக்கடைகள் இன்று வியாழக்கிழமை முதல் மூடப்படுகின்றன. தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு பல்வேறு தரப்பினரும் வரவேற்பைத் தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாட்டில் 5,329 டாஸ்மாக் சில்லரை விற்பனை மதுக்கடைகள் செயல்பட்டு வருகின்றன. தமிழக அரசுக்கு மது விற்பனை மூலம் அதிக வருவாய் கிடைத்து வருகிறது. அதன்படி கடந்த 2003 - 2004 ஆம் நிதி ஆண்டில் 3,639 கோடியே 93 லட்சமாக இருந்த இந்த வருவாய் 2022-2023 ஆம் நிதியாண்டில் 44,098 கோடியே 56 லட்சமாக அதிகரித்தது.

அதே வேளையில் மதுபானங்கள் பல குடும்பங்களின் சீரழிவுக்கு காரணமாக அமைவதால் மதுக்கடைகளை மூட வேண்டும், தமிழ்நாட்டில் மதுக்கடைகளின் எண்ணிக்கையை படிப்படியாக குறைத்து பூரண மதுவிலக்கை அமல்படுத்த வேண்டும் போன்ற கோரிக்கைகளும் தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், கடந்த ஏப்ரல் மாதம் தமிழக சட்டசபையில் நடைபெற்ற உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மீதான மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, தமிழ்நாட்டில் 500 மதுக்கடைகள் மூடப்படும் என்ற அறிவிப்பு இடம்பெற்றது. இந்த அறிவிப்பைத் தொடர்ந்து, எந்தெந்தப் பகுதிகளிலுள்ள கடைகளை மூடலாம் என்பது குறித்து டாஸ்மாக் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

குறிப்பாக பாடசாலைகள், கல்லூரிகளுக்கு மிக அருகில் இருக்கும் கடைகள், பொதுமக்களுக்கு இடையூறாக இருக்கும் கடைகள், மத வழிபாட்டுத் தலங்களின் அருகில் உள்ள கடைகள் போன்றவற்றை மூடுவதற்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதேபோன்று வருமானம் குறைவாக உள்ள கடைகள், பணியாளர்கள் எண்ணிக்கை குறைவாக உள்ள கடைகள், அருகருகே இருக்கும் கடைகள் போன்றவையும் இந்தக் கணக்கெடுப்பின்போது ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

அதுமட்டுமல்லாமல் தங்கள் பகுதியில் உள்ள மதுக்கடைகளை மூட வேண்டும், என பொதுமக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் தரப்பில் இருந்து தொடர்ந்து புகார் அளிக்கப்பட்ட கடைகளையும், நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்து உத்தரவு பெற்ற கடைகளையும், தொடர்ந்து கடை செயல்பட கட்டிட உரிமையாளர்கள் ஆட்சேபம் தெரிவித்துள்ள கடைகளையும் கவனத்தில் கொண்டு ஆலோசிக்கப்பட்டது.

அவற்றின்படி, சென்னை மண்டலத்தில் 138 கடைகள், கோவை மண்டலத்தில் 78 கடைகள், மதுரை மண்டலத்தில் 125 கடைகள், சேலம் மண்டலத்தில் 59 கடைகள், திருச்சி மண்டலத்தில் 100 கடைகள் என மொத்தம் 500 மதுபான கடைகளை மூடுவது என இறுதி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மாநிலம் முழுவதும் கணக்கெடுக்கப்பட்டுள்ள 500 மதுக்கடைகள் இன்று வியாழக்கிழமை முதல் மூடப்படுகின்றன, என தமிழக அரசு அறிவித்துள்ளது.

மூடப்படுகின்ற 500 மதுக்கடைகளிலும் பணியாற்றி வரும் மேற்பார்வையாளர்கள், விற்பனையாளர்கள், உதவி விற்பனையாளர்களை ஆட்கள் பற்றாக்குறை உள்ள கடைகளில் பணி அமர்த்தவும், டாஸ்மாக் நிறுவனத்தில் மாற்றுப்பணி வழங்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான ஆணை விரைவில் பிறப்பிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த 2016 ஆம் ஆண்டு நடந்த சட்டசபைத் தேர்தலின் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையில் படிப்படியாக பூரண மதுவிலக்கு அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் அப்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் கடந்த 19.6.2016 அன்று 500 டாஸ்மாக் கடைகள் மூடப்பட்டன.

தற்போது, 500 டாஸ்மாக் கடைகள் மூடப்படுகின்றன என்ற தமிழக தி.மு.க. அரசின் அறிவிப்பை பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், பெண்கள், அரசியல் கட்சியினர் எனப் பல்வேறு தரப்பினரும் வரவேற்றுள்ளனர்.

## தெலுங்கானாவில் புதிய பாலம் இடிந்து விழுந்து 9 பேர் படுகாயம்

தெலுங்கானா தலைநகர் ஹைதராபாத்தில் உள்ள எல்.பி. நகர் பகுதியில் புதிதாகப் பாலம் ஒன்று கட்டப்பட்டு வந்தது. கட்டுமானப் பணிகள் நிறைவு பெறும் தருவாயில் இருந்ததால், பாலத்தை விரைவில் திறப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் நேற்று அதிகாலை 3 மணியளவில் பாலத்தின் ஒரு பகுதி திடீரென இடிந்து விழுந்தது. இதில் பாலத்துக்கு அடியில் உறங்கி கொண்டிருந்த 9 தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கினர். இதையடுத்து, உடனடியாக மீட்பு பணிகள் முடுக்கிவிடப்பட்டன.

இடிபாடுகளை அகற்றி 9 தொழிலாளர்களையும் மீட்பு குழுவினர் மீட்டெடுத்து, அவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்குச் சேர்த்தனர். அங்கு அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

## போலிச் செய்தி பரப்பினால் கடும் நடவடிக்கை கர்நாடக முதல்வர் சித்தராமையா எச்சரிக்கை!

கர்நாடகாவில் காங்கிரஸ் அரசுக்கு எதிராக சமூக வலைதளங்களில் அவதூறான தகவல்கள் அதிகம் பரப்பப்படுகின்றன. போலிச்செய்திகள் பரப்புவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு உள்துறை அமைச்சருக்கு உத்தரவிட்டேன், என கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்துள்ளார்.

பெங்களூரில் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய அவர், பெங்களூர் காவல் ஆணையர் அலுவலகத்தில் இதற்கென தனிப் பிரிவை உருவாக்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. சைபர் கிரைம் பொலிஸாரில் இதற்காகத் தனிப் பிரிவு உருவாக்கப்பட்டு, அவர்கள் சமூக வலைத்தளங்களைக் கண்காணிப்பார்கள், என்றும் குறிப்பிட்டார்.

## விஜய்தான் உண்மையான சூப்பர் ஸ்டார் அவரது உதவி தேவையில்லை: சீமான்



திருநெல்வேலி மாவட்டம் மானூரில் அரசுக் கலைக் கல்லூரி கட்டுவதற்கு முதலில் இடம் தேர்வு செய்யப்பட்டது. அதன் அடிப்படைக் கட்டுமானப் பணிகள் நடைபெற்று, அந்தப் பணிகள் கைவிடப்பட்டன. மாற்று இடத்தில் கல்லூரி கட்டுவதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டுள்ள நிலையில் பழைய கல்லூரிக் கட்டுமானம் நடைபெற்ற இடத்தை நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங் கிணைப்பாளர் சீமான் நேரில் பார்வையிட்டார்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், தமிழ்நாட்டு அரசு தனியார் பன்னாட்டு நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. மாற்று இடத்தில் கல்லூரி கட்டுவதற்கு நாம் தமிழர் கட்சி ஒருபோதும் அனுமதிக்காது, என்று தெரிவித்தார்.

செந்தில் பாலாஜிக்கு நடைபெறும் அறுவை சிகிச்சையை நேரலை செய்தால்தான் உண்மையிலேயே என்ன நடக்கிறது என்று தெரியும். அவரது உடல் நலத்தைக் காரணம் காட்டி அவருக்குப் புனிதர் பட்டம் கொடுத்து விடுவார்கள்.

ஒரே இரவில் பண மதிப்பிழப்பு நடவடிக்கையை கொண்டு வந்த பிரதமர் மோடி மே மாதம் அல்லது வரக்கூடிய டிசம்பர் மாதத்திலேயே நாடாளுமன்றத் தேர்தலையும் நடத்தலாம். அவர் நினைத்தால் எப்போது வேண்டுமானாலும் தேர்தலை நடத்துவார். காங்கிரஸ் கட்சியின் 10 ஆண்டு ஊழல் ஆட்சியால தான் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தது.

மோடியை வீழ்த்த மாநில கட்சிகள் வலுப்பெற வேண்டும். தேர்தலுக்குப் பிறகு கூட்டாட்சி நடத்தும் விதமாக பேச்சுவார்த்தை மூலம் அதிக நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் தலைவரை பிரதமராக தேர்ந்தெடுக்கலாம். அதை விடுத்து பொது வேட்பாளராக மோடிக்கு எதிராக ராகுல் காந்தியை நிறுத்தினால் அவர் ஊதித் தள்ளிவிடுவார்.

ஒரு பட்டனை அழுத்தினால் குண்டு விழும் என்று ரஷ்யாவும் சீனாவும் கூறிக் கொள்வது போன்று, ஒரே பட்டனை அழுத்தினால் பா.ஜ.க.விற்கு வாக்குகள் விழும் வகையில் ஏற்பாடுகளை மோடி செய்வார். பணம் கொடுப்பவர்கள் 10 ஆண்டுகள் தேர்தலில் நிற்பதற்குத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். தேர்தல் ஆணையத்திடம் நேர்மை இல்லை, என்றும் சீமான் தெரிவித்தார்.

நடிகர் விஜயின் அரசியல் நகர்வுகள் பற்றிக் கேட்கப்பட்டதற்கு, நடிகர் விஜய் நன்மை செய்யும் நோக்கில் அவர் அரசியலுக்கு வந்தால் தவறில்லை. அதேநேரத்தில் விஜய்யின் உதவி எனக்குத் தேவையில்லை. தற்போது இந்தியாவில் அதிகமாக திரைப்படத்திற்கு சம்பளம் பெறும் நடிகர் விஜய்தான். தமிழ்நாட்டில் அதிகமான ரசிகர்கள் இருப்பதும் அவருக்குத்தான். அவர்தான் உண்மையான சூப்பர் ஸ்டார்! - என்று சீமான் பதிலளித்தார்.

## அனைத்து மாநிலங்களையும் ஆளுநர்கள் மூலம் பிரதமரே ஆட்சி செய்யும் நாள் வந்துவிடும்!

### அரவிந்த் கெஜ்ரிவால் எச்சரிக்கை!

டெல்லியில் அரசு அதிகாரிகள் நியமனம், இடமாற்றம் ஆகியவற்றில் டெல்லி அரசுக்கே அதிகாரம் உள்ளதாக சுப்ரீம் கோர்ட் தீர்ப்பளித்தது. இந்தத் தீர்ப்பை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் மத்திய அரசு அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்துள்ளதாக டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதே போல் வருங்காலத்தில் எல்லா மாநில அரசுகளின் அதிகாரங்களையும் மத்திய அரசு பறிக்கும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அவசர சட்ட விவகாரத்தில், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளரும் டெல்லி முதலமைச்சருமான கெஜ்ரிவால் கடந்த மே 23 ஆம் திகதியில் இருந்து, இந்தியா முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு, அவசர சட்டத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கோரி வருகிறார்.

இந்த நிலையில், பீகாரில் எதிர்க்கட்சிகளின் கூட்டம் நாளை நடைபெற உள்ளது. இதில், நாடாளுமன்றத்தில் இந்த அவசரச் சட்டத்தை எப்படித் தோற்கடிப்பது என்பது பற்றி முதலில் விவாதிக்கப்பட வேண்டும், என அவர் எதிர்க்கட்சிகளுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

இந்த அவசரச் சட்டம் ஒரு பரிசோதனை. இதில் வெற்றி பெற்று விட்டால், இதேபோன்ற அவசரச் சட்டங்களை கொண்டு வந்து, பா.ஜ.க. அல்லாத மாநிலங்களின் உரிமைகளை மத்திய அரசு எடுத்து கொள்ளும். அதன்பின் அனைத்து மாநிலங்களையும், 33 ஆளுநர்கள் அல்லது துணை நிலை ஆளுநர்கள் வழியே பிரதமரே ஆட்சி செய்யும் நாள் தொலைவில் இல்லை, எனவும் கெஜ்ரிவால் தனது கடிதத்தில் எச்சரித்துள்ளார்.

# தொடரும் மோசமான வானிலை காரணமாக நெதர்லாந்து விமானப் போக்குவரத்து பாதிப்பு



நெதர்லாந்தின் பல பகுதிகளில் கடந்த சில நாட்களாகப் பலத்த இடி, மின்னலுடன் கனமழை பெய்து வருகிறது. இதனால், அந்த நாட்டின் பல பகுதிகள் மழை நீரில் மூழ்கி வெள்ளக்காடாக மாறியுள்ளன. அவசியமின்றி வீட்டினை விட்டு வெளியேறவேண்டாமென பொதுமக்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வானிலை மையத்தின் எச்சரிக்கை காரணமாக அம்ஸ்டர்டாம் சர்வதேச விமான நிலையத்தின் விமானப் போக்குவரத்தும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. அதனால், வெளிநாடுகளுக்கு செல்ல வேண்டி இருந்த 37 க்கும் மேற்பட்ட சர்வதேச விமானங்களின் பயணங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அம்ஸ்டர்டாமுக்கு வரக்கூடிய சர்வதேச விமானங்களும் ரத்துச் செய்யப்பட்டு அண்டை நாடுகளுக்குத் திருப்பி விடப்பட்டுள்ளன. நிலைமை சீராகும் வரை இந்த நடவடிக்கை தொடரும் என அந்த நாட்டின் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## ரஷ்யாவிற்கு எதிரான உக்ரைனின் பதிலடித் தாக்குதல் மெதுவாகவே நடைபெறுகிறது! – ஜெலன்ஸ்கி அறிவிப்பு



15 மாதப் போர் நடவடிக்கையில் அதிகப்படியான ஆயுதக் கையிருப்பை உறுதிப்படுத்திய பின்னர், உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கி, ரஷ்யாவிற்கு எதிரான பதிலடித் தாக்குதலை அறிவித்தார்.

இந்தப் பதிலடித் தாக்குதலின் மூலம் 7 மாதங்களுக்குப் பிறகு ரஷ்யக் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த 8 உக்ரைனியக் கிராமங்களை உக்ரைனிய ஆயுதப்படை மீட்டுள்ளது.

இருப்பினும், தாங்கள் எதிர்பார்த்ததை விட பதிலடித் தாக்குதல் மெதுவாகவே அமைந்திருப்பதாக உக்ரைனிய ஜனாதிபதி ஜெலென்ஸ்கி ஒப்புக்கொண்டுள்ளார்.

சிலர் பதிலடித் தாக்குதல் என்பது ஹொலிவுட் படம் போன்றது என நம்பி உடனடி முடிவுகளை எதிர்பார்க்கின்றனர். ஆனால், அது அப்படி அல்ல. ஆபத்தில் இருப்பது மக்களின் உயிர்கள், என அவர் சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், உக்ரைனியப் படைகளால் ரஷ்யாவின் முக்கிய தற்காப்பு எல்லையை அடைய முடியவில்லை என்பதையும் ஜெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்யப் படைகள் ஆக்கிரமித்து வைத்துள்ள உக்ரைனின் 77,220 சதுர மைல் பரப்பளவில் அதிகமான கண்ணி வெடிகள் புதைக்கப்பட்டுள்ளன. இதனால், உக்ரைனியப் படைகளின் முன்னேற்றம் கடினமாக உள்ளது, என ஜெலென்ஸ்கி குறிப்பிட்டுள்ளார்.

எங்களுக்கு அழுத்தம் தருவது சிலருக்குத் தேவைப்படலாம். ஆனால், அனைத்துச் சிறந்த வழிகளிலும் போர்க்களத்தில் முன்னேறுவோம், எனவும் ஜெலென்ஸ்கி உறுதிபடக் கூறியுள்ளார்.




## அலிபாபா நிறுவனத்தின் தலைவர்கள் மாற்றம்!

சீனாவில் கொரோனாக் கட்டுப்பாடுகள் முடிவுக்கு வந்து பல மாதங்கள் ஆகியும் அங்கு பொருளாதாரம் மந்த நிலையிலேயே உள்ளதாகத் தரவுகள் கூறுகின்றன.

இதனால், சீனாவின் முக்கிய மின்னணு வர்த்தக நிறுவனமான அலிபாபாவும் பாதிக்கப்பட்டது. இந்த அலிபாபா நிறுவனமானது அங்கு செயலிகள் உருவாக்கம், கிளவுட் கொம்ப்யூட்டிங் உள்ளிட்ட பல துறைகளிலும் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிறுவனத்தின் வளர்ச்சியைத் தூண்டும் வகையில் ஒரு பெரிய நிர்வாக மறுசீரமைப்பை அலிபாபா மேற்கொண்டுள்ளது. அதாவது, மின்னணு வர்த்தகக் குழுமத்தின் தலைவராக உள்ள எடி வூ தலைமை நிர்வாக அதிகாரியாகவும், தற்போது தலைவராக உள்ள டேனியல் ஸாங் கிளவுட் கொம்ப்யூட்டிங் பிரிவின் தலைமை நிர்வாக அதிகாரியாகவும் செயல்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, நிர்வாகத் துணைத்தலைவரான ஜோசப் சாய், அலிபாபா குழுமத்தின் தலைவராகப் பொறுப்பேற்கவுள்ளார். தாய்வானில் பிறந்த இவர் அலிபாபா நிறுவனம் உருவானதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஷேன் வோர்னின் மரணம் கொவிட் தடுப்பூசியுடன் தொடர்புடையது: பிரிட்டன் வாழ் இந்திய மருத்துவர்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர வீரரும், சுழற்பந்து வீச்சில் தனி முத்திரை பதித்தவருமான ஷேன் வோர்ன், கடந்த ஆண்டு மார்ச் 4 ஆம் திகதி, தாய்லாந்தில் அவரது பங்களாவில் உயிரிழந்திருந்தார். அதற்கு மாரடைப்பு காரணம் என தகவல் வெளியானது.

இந்த நிலையில், ஷேன் வோர்னின் மரணம், கொவிட் எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசியுடன் தொடர்புடையது, என பிரித்தானியாவிலுள்ள இந்திய வம்சாவளி இதய நோய் நிபுணரான அசீம் மல்கோத்ரா தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய மருத்துவ வல்லுநர்கள் சங்கத்தின் தலைவரான மருத்துவர் கிறிஸ் நீல் மற்றும் மருத்துவர் அசீம் மல்ஹோத்ரா ஆகியோர் ஷேன் வோர்னின் பிரேத பரிசோதனை முடிவுகளை ஆய்வு செய்ததில் அவருக்கு ஏற்கனவே இதய நோய் இருந்ததாகத் தெரிய வந்துள்ளது.

அவர்களது ஆய்வின் முடிவில், ஏற்கனவே கண்டறியப்படாத லேசான இதய நோய் உள்ளவர்களுக்குச் செலுத்தப்படும் ஒரு கொவிட் எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசியானது, அவர்களின் உடல்நிலையில் விரைவான முடுக்கத்தை ஏற் படுத்தக்கூடும், எனத் தெரிய வந்துள்ளது.

ஷேன் வோர்ன் அந்தத் தடுப்பூசியைச் செலுத்திக் கொண்டதற்குப் பிறகான தரவுகள் குறித்து மருத்துவர் மல்கோத்ரா சுட்டிக்காட்டுகிறார். அதிலும், சர்வதேச முன்னாள் விளையாட்டு வீரர்கள், இவ்வளவு இள வயதில் (52) திடீரென மாரடைப்பால் மரணம் அடைவது மிகவும் அசாதாரணமானது, என்றும் அவர் தெரிவிக்கிறார்.

அதே நேரத்தில், ஷேன் வோர்ன் சமீபத்திய ஆண்டுகளில் அதிக எடை கொண்டவராகவும் இருந்துள்ளதோடு, அவர் அதிகமாகப் புகைப் பழக்கத்தையும் கொண்டிருந்திருக்கிறார். இத்தகைய செயல்களால், அவர் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கவில்லை என்பதையும் நாங்கள் அறிவோம், என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவுஸ்திரேலியா உட்பட உலகெங்கிலும் அண்மைய காலங்களில் ஏற்படும் அதிக மரணங்களுக்கு கொவிட் எம்.ஆர்.என்.ஏ. தடுப்பூசிகள் முக்கிய காரணம் என்பதில் எனக்குச் சந்தேகம் இல்லை. இது தொடர்பான விசாரணை நிலுவையில் உள்ள நிலையில், உலகம் முழுவதும் அவற்றின் பயன்பாடு உடனடியாக நிறுத்தப்பட வேண்டும், எனவும் மருத்துவர் அசீம் மல்கோத்ரா வலியுறுத்தியுள்ளார்.

# இலங்கைப் பாடத்திட்டத்தில் ஜப்பானிய மொழி



ஜப்பானிய தொழில் சந்தையை இலக்காகக் கொண்டு ஆரம்ப மட்டத்திலிருந்து பாடசாலைப் பாடத்திட்டத்தில் ஜப்பானிய மொழியை உள்ளடக்குவதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தொழிலாளர் மற் றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இன்று நாடாளுமன்றத்தில் விசேட அறிக்கையொன்றைச் சமர்ப்பித்து உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அமைச்சரவை ஊடாக குறித்த பாடத்திட்டத்திற்கான விசேட அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்படி, எதிர்காலத்தில் கல்வி அமைச்சுடன் இணைந்து, ஆரம்பப் பிரிவினருக்கு அடிப்படை மட்டத்திலும் தரம் 6 இலிருந்து ஜப்பானிய மொழியை ஒரு பாடமாகக் கற்பிப்பது தொடர்பான செயற்பாடுகள் தயாராகி வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

ஜப்பானிய சந்தையை இலக்காகக் கொண்டு 5,000 ஜப்பானிய மொழிப் பயிற்றுவிப்பாளர்களைக் கொண்ட குழுவை அமைக்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.06.2023இல் வெளியிடப்பெற்றது.